India Media Monitor

# Dina Malar

## Chennai Floods did not affect the increasing job opportunities

Date: 29/07/2016 | Edition: Chennai | Page: 2 | Source: Bureau | Clip size (cm): W: 12 H: 15

# வெள்ளத்தால் பாதிப்பில்லை வேலைவாய்ப்பு அதிகரிக்கும்!

அடுத்த 6 மாதங்களில் பல துறைகளில் வேலை வாய்ப்பு பெருகும் என்று 'விஸ்டம்ஜாப்ஸ்.காம்' என்ற இணையதளம் நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.


அஜய் கோல்லா

விஸ்டம்ஜாப்ஸ் டாட் காம் நிறுவனரும் தலைமைச் செயல் அதிகாரியுமான அஜய் கோல்லா, இந்த ஆய்வு முடிவுகளை வெளியிட்டு பேசியதாவது:

கடந்த ஆண்டு இறுதியில் சென்னையை பாதித்த பெரு வெள்ளத்தால் வேலை வாய்ப்பில் தேக்க நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதிகம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நாங்கள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை தகவல் தொழில்நுட்பம், ஆட்டோமொபைல், உற்பத்தித் துறைகளில் அதிக வேலை உருவாகும். மத்திய அரசின் மேக் இன் இந்தியா திட்டம் காரணமாக உற்பத்தி மற்றும் இன்ஜினியரிங் சார்ந்த துறைகளில் அதிக முதலீடுகள் வருவதற்கான வாய்ப்புகள் பிரகாசமடைந்துள்ளன. இதனால் இந்த துறைகளில் வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் கடந்த ஆண்டு ஒன்றரை சதவீத அளவுக்குத் தான் வேலை வாய்ப்புகள் உருவாகின. இந்த ஆண்டு இது 13.5 சதவீத அளவுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மருந்து தயாரிப்பு மற்றும் உடல் நலன் சார்ந்த துறையில் அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்பு பெருகும். இந்த துறையில் 12.5 சதவீத அளவுக்கு வேலை வாய்ப்பு இருக்கும். இ–காமர்ஸ் துறையில் 15 சதவீத அளவுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கம் இருக்கும். அதிகம் விற்பனையாகும் நுகர்வோர் பொருள் தயாரிப்பு (எப்எம்சிஜி) நிறு வனங்கள் கடந்த சில ஆண்டுகளாக தேக்க நிலையை சந்தித்து வருகிறது. இதனால் இந்த துறையின் வேலை உருவாக்கம் 0.5 சதவீத அளவுக்கே இருக்கும். தொலைதொடர்புத் துறையில் நவீன நுட்பங்கள் வந்து கொண்டேயிருந்தாலும், இதில் வேலை உருவாக்கம் கடந்த ஆண்டைக் காட்டிலும் அடுத்த 6 மாதங்களில் 0.5 சதவீதம் குறைந்து 9 சதவீத அளவிலேயே இருக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.